# அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் – திருவண்ணாமலை

"தென்னாடுடைய சிவனே போற்றி" என்று பாடப்பெற்றாலும், "என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று போற்றப்படுபவர் சிவபெருமான்,. உலகெங்கும் சிவபெருமானை தெய்வமாகக்கொண்டு, திருக்கோயில் பல தமிழகத்தில்தான் அதிகம் உள்ளன என்றாலும், இந்திய நாடு மட்டுமின்றி உலகெங்கும் திருக்கோயில்களும், திருமடங்களும், இந்துவாக பிறந்து வளர்ந்தவர்களால் மட்டும்தான் நிர்வகிக்கப்பட்டு வருவதைக் கண்டுள்ளோம். ஆனால், பிறப்பால் இந்துவாக இல்லாமலும், இந்தியராக இல்லாமலும் உள்ள வேறுநாட்டு சமூகத்தை சேர்ந்தவர்கள், குறிப்பாக, முன்னேறிய மேலைநாடுகளில் வசிக்கும் வெள்ளையர் தாமே உருவாக்கி, தாமே குருவாக இருந்துவரும் சைவத்திருமடம், (ஆதினம் என்று அழைக்கப்பட்டால் பிற நாட்டவருக்கு பொருள் எளிதில் விளங்காதிருக்கலாம் என்பதால்) **"ஹவாயி நாட்டில்" "Kauai's Hindu Monastery"** என்ற பெயரில் ஸ்தாபித்து நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

குருதேவா, என்று அழைக்கப்படும் கலிபோர்னியாவில் பிறந்த ஆன்மீக பெரியாரால் தோற்றுவிக்கப்பட்ட இந்த மடம் தற்போது, **" போதிநாதா "** என்பவரால் பீடாதிபதியாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. கடவுள் Temple, இறைவன் Temple என்றெல்லாம் தங்களது திருமடத்தின் கோயில்களை பெயரிட்டு அழைக்கும் அளவுக்கு தமிழ் வழி சைவசமயம் இவர்களுக்கு அறிமுகமாகியுள்ளது.

மேற்படி, வெளிநாட்டு ஆதீனத்தை சேர்ந்த பீடாதிபதியும், அவர்களது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சீடர்களும், முற்றிலும் சைவசமய பண்பாடு, உடை, சம்பிரதாய செயல்பாடுகளுடன் இன்று, **25.01.2008** திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலுக்கு வருகை தந்து, அருள்மிகு கல்யாண சுந்தரேசுவரர் சன்னதியில் ஒரு வேள்வியும், அருள்மிகு சுவாமி, அம்பாள் ஆகியோருக்கு முறையாக அபிஷேகமும் செய்தனர். அனைவரையும் சிந்திக்கவும், வியப்பில் ஆழ்த்தவும்வல்ல இந்நிகழ்ச்சி சைவசமயத்தின் பெருமையையும், அருள்மிகு அருணாசலேசுவரரின் திருவருளையும், உலகெங்கும் உணர்ந்துள்ள உண்மை இதன் மூலம் மீண்டும் தெரிகிறது. இந்த ஆதினகர்த்தரிடம் தங்களது வெளியீடுகளை, புத்தகங்களை இத்திருக்கோயிலுக்கு நூலகம் அமைக்க உதவிடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சிறிது கால அவகாசத்தில் உதவுவதாக தெரிவித்தனர்.